Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 516/2023**

**Deposition o PW.4 (LW.2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராம்ஜி | ஜாதி | : | |
| த/பெ | : | சேகர் | தொழில் | : | Jio தனியார் நிறுவனத்தில் வேலை செய்கிறேன். |
| கிராமம் | : | சின்னாளபட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 36/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.10.2025.

(1 முதல் 4 எதிரிகள் ஆஜர் இல்லை, பிரிவு 317 குவிமுச படி மனு தாக்கல் செய்து அம்மனு அனுமதிக்கப்பட்டது)

**முதல் விசாரணை**

நான் சின்னாளபட்டியில் குடியிருந்துகொண்டு Jio தனியார் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். பார்த்தசாரதி, கணேசன், வீரலட்சுமி, சந்தோஷ் ஆகிய நான்கு பேரும் எனக்கு தெரியும், எனது உறவினர்கள் ஆவார்கள். என் தங்கைக்கு பார்த்தசாரதியை 2017 ல் திருமணம் செய்து கொடுத்தோம். கடந்த 25.01.2020 அன்று என் வீட்டிற்கு முன்பாக நானும், என் அப்பாவும் , என் தங்கையும் நின்று பேசிக்கொண்டிருந்தபோது, எதிரிகள் நான்கு பேரும் வந்து என் தங்கையை வீட்டிற்கு வரச் சொல்லி சொன்னார்கள். பேசிக்கொண்டிருக்கும் போதே வீட்டிற்குள் சென்று என் தங்கைக்கும், பார்த்தசாரதிக்கு பிறந்த குழந்தையை வலுக்கட்டாயமாக எடுத்துச் செல்ல முயன்றார்கள். கண்டாரஒலி, தேவிடியா மகளே நீ வரவில்லை என்றால் உன்னை கொன்றுவிடுவேன் என்று பார்த்தசாரதி என் தங்கையை பார்த்து மிரட்டினார். சம்பவத்தின் போது என் அப்பாவின் நண்பர் ராகவன், என் தாய் மாமா செல்லையா ஆகியோர் சத்தம் கேட்டவுடன் சம்பவ இடத்திற்கு வந்தார்கள். மறுநாள் சின்னாளபட்டி காவல் நிலையத்தில் நாங்கள் புகார் கொடுத்தோம். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

2வது எதிரி கணேசன் 6 ஆண்டுகளுக்கு முன்பு விபத்தில் கால்களை இழந்துவிட்டார், அவரால் நடக்க இயலாது என்றால் சரிதான். உங்கள் தங்கைக்கு திருமணம் நடந்தபிறகு பெரும்பாலும் உங்கள் வீட்டில் தான் இருந்தார்கள் என்றால் சரிதான். கடந்த 2 ஆண்டுகளாக நீங்களும், உங்கள் தாயாரும், சகோதரியும் உடுமலைபேட்டையில் தான் வசித்து வருகிறீர்கள் என்றால் சரிதான். குழந்தை பிறந்த பிறகு எதிரி பார்த்தசாரதி உங்கள் தங்கையை சேர்ந்து வாழ வரச்சொல்லி உங்கள் சகோதரரிடமும், உங்கள் மாமாவிடமும் சொன்னார் என்றும், என்ன காரணத்தினாலோ உங்கள் தங்கை சேர்ந்து வாழ செல்லவில்லை என்றால் சரியல்ல. குழந்தை பிறந்ததற்கு பிறகு 2 வருடம் என் தங்கை பார்த்தசாரதியுடன் சேர்ந்து வாழ்ந்தார்.

நீங்கள் சொல்வது போல் இரண்டு வருட காலம் சேர்ந்து வாழவில்லை என்றும், சிறிது காலம் தான் சேர்த்து வாழ்ந்தார் என்றால் சரியல்ல. உங்கள் தங்கை மீது 1ஆம் எதிரி தாக்கல் செய்துள்ள விவகாரத்து வழக்கு உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். மதுரை குடும்ப நல நீதிமன்றத்தில் OP.No.218/2021 என்ற எண்ணில் உங்கள் தங்கைக்கு எதிராக விவகாரத்து வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கிற்கு முன்பாக திண்டுக்கல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 1வது எதிரி மீது கடந்த 05.02.2019 அன்று உங்கள் தங்கை புகார் கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அந்த புகார் மனு தொடர்பாக உங்களுக்கு நேரில் தெரியாது என்றால் சரியல்ல, தெரியும்.

அந்த புகார் மனுவில் காவல் நிலையத்தில் உங்கள் தங்கையை சேர்ந்து வாழ அறிவுறுத்தினார்கள் என்றால் சரிதான். அந்த புகார் மனுவின் மீது மதுரை உயர் நீதி மன்றத்தில் இந்த எதிரிகள் தாக்கல் செய்த முன் ஜாமீன் மனுவில் சேர்ந்து வாழ சொல்லி சமரச முயற்ச்சி செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த சமரச முயற்ச்சிக்கு ஒத்துழைப்பு கொடுக்காமல் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யச் சொல்லி பிரச்சனை செய்தார் என்றால் சரியல்ல. அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைக்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் உங்கள் சகோதரி தடை உத்தரவு பெற்றார் என்றால் சரிதான்.

அதேபோல உறவினர் வகையிலும், உங்கள் தங்கையை சேர்ந்து வாழ வலியுறுத்தினார்கள் என்றும், அவற்றை தவிர்ப்பதற்காக இந்த புகாரை எதிரிகள் மீது

பொய்யாக உங்கள் தங்கை கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. உங்கள் தங்கை அளித்த புகாரை போலிசார் விசாரித்து சம்பவம் நடக்கவில்லை என்பதால் வழக்கு பதிவு செய்யவிலலை என்றும், பொய்யான தகவலை சொல்லி நீதிமன்றத்தில் எதிரிகள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய உத்தரவு பெற்று பலிவாங்கும் நோக்கத்தில் பொய்யாக இவ்வழக்கு புனையப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. உண்மையில் வழக்கு சம்பவம் நடைபெறவில்லை என்றும், நீதிமன்ற உத்தரவு என்பதால் தான் இவ்வழக்கு பெயரளவில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

கடந்த 2022 ஆம் வருடம் உங்கள் தங்கையும், 1வது எதிரியும் சமரசம் ஏற்பட்டு சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றால் சரிதான், 2 ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்தார்கள். நீங்கள் சொல்வது போல் வழக்கு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும், எதிரிகள் உங்கள் வீட்டிற்கு வந்ததில்லை என்றும், புகார் கொடுத்தது உங்கள் தங்கை என்பதால் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் சொல்வது போல் 1ஆம் எதிரி குழந்தையை பிடுங்குவதற்கு முயற்ச்சிக்கவில்லை மற்றும் ஆபாசமாக பேசவில்லை என்றால் சரியல்ல.

**Sd/-Thiru. S. Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor